# கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(i) இ.க.நி. இல. 03 இன் படி வழக்குத் தீர்ப்பினால் கிடைத்திருந்த ரூபா 15.6 மில்லியன் தண்டப்பணம் சம்பந்ததமாக குறிப்பின் மூலம் கணக்குகளில் வெளிக்காட்டப்படாதிருந்ததுடன் ரூபா 11.6 மில்லியன் கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு நிதியத்திற்கும் ரூபா 4 மில்லியன் ஊழியர் இடர் நிதியத்திற்கும் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ii) இ.க.நி. இல. 18 இன் படி சொத்துக்களை பெறுமானத்தேய்வு செய்தலானது குறித்த சொத்தினைப் பயன்படுத்துவதற்கு இயலுமான சந்தர்ப்பத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையினால் ரூபா 8,021,851 பெறுமதியான சொத்துக்கள் தொடர்பில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமை |
|---|---|
| 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 5.2.5 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்குரிய பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இறுதிப் பாதீடு குறித்த ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களிற்கு முன்னர் தொடர்புடைய அமைச்சு, பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், பாதீடானது 2011 ஜனவரி மாதமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (ii) 6.5.3 ஆம் பிரிவு | 2009 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 7.4.1 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் படி காலாண்டுக்கு குறைந்தது ஒரு முறை வீதம் வருடத்திற்கு 4 கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2010 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 1 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

#### 2.1.1 நிதி விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் அதிகாரசபையின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 45,870 பற்றாக்குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,809,829 மிகையுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 1,855,699 பாதகமான முரணொன்று அவதானிக்கப்பட்டது.

#### 2.1.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் வருமானம் ரூபா 4,286,157 ஆல் அதிகரித்திருந்த போதிலும், சம்பளம் மற்றும் பதவியணிச் செலவினம் ரூபா 1,157,076 இனாலும் ஏனைய மிகைக்கட்டணச் செலவினம் ரூபா 1,735,776 இனாலும் மானியம் மற்றும் ஏனைய மாற்றல் செலவினம் ரூபா 3,249,004 இனாலும் அதிகரித்திருந்தமையால் மொத்தச் செலவினம் ரூபா 6,141,856 ஆல் அதிகரித்திருந்தமை மேற்படி பாதகமான முரணிற்கு காரணமாகியிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்து நோக்குகையில் அதிகாரசபையின் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 16.2 மில்லியனாலும் நடைமுறையல்லா பொறுப்புக்கள் ரூபா 16.3 மில்லியனாலும் அதிகரிப்பைக் காட்டியது. அவ் அதிகரிப்பு முறையே 276% ஆகவும் 373% ஆகவும் காணப்பட்டது. மீளாய்வாண்டில் கிடைத்திருந்த தண்டப்பணம் முதலீடு செய்யப்பட்டிருந்தமையே இதற்குப் பிரதானமாக பங்களிப்புச் செய்த காரணியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

அதிகாரசபையினால் 2010 ஆம் ஆண்டில் செயலாற்றலானது காலரீதியாக மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டின் ஒவ்வொரு நடவடிக்கைக்குமாக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாட்டுத் தொகைக்கும் மேலாக 9 நடவடிக்கைகளிற்காக ரூபா 3,868,640 ஆன 45.68% தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாட்டுத் தொகையில் 3 நடவடிக்கைகளிற்கான ஏற்பாட்டுத் தொகைகளும் மேலும் 4 நடவடிக்கைகளிற்கான ஏற்பாட்டுத் தொகையில் 70% அல்லது அதற்கும் மேற்பட்ட தொகையொன்று சேமிப்பாகியிருந்தது.

### 2.2.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 4.8 மில்லியன் ஆனதுடன் அது மொத்த வருமானத்தில் 9% ஆகும். அரசாங்க மானியம் ரூபா 48.1 மில்லியனாக காணப்பட்டதுடன் அது மொத்த வருமானத்தில் 91% ஆகும். மொத்த வருமானத்திலிருந்து மீண்டெழும் செலவினத்திற்காக 79% ஆன ரூபா 42 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 11 மில்லியன் அதாவது மொத்த வருமானத்தில் 21% மாத்திரமே கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் மூலதனச் செலவினங்களிற்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது.

### 2.2.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

கடலை மாசுபடுத்தியமைக்காக "எம்ரீ கிறென்பா" கப்பலிற்கு (Mt Granba incident) எதிராக தொடுக்கப்பட்ட வழக்கிலிருந்து தண்டப்பணமாக 2010 ஜுன் 11 ஆந் திகதி கிடைத்திருந்த பணத்தில் ரூபா 10 மில்லியன் தொகையொன்று 2010 நவம்பர் 11 ஆந் திகதி வரை நடைமுறைக் கணக்கொன்றில் 05 மாத காலம் பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 பதவியணிக் கிரயம்

| பதவி | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | தற்போதுள்ள ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பொது முகாமையாளர் | 01 | 01 | - |
| உதவி முகாமையாளர் நடவடிக்கைகள் | 01 | 01 | - |
| உதவி முகாமையாளர் (மாகாணம்) | 03 | 02 | 01 |
| முகாமையாளர் | 03 | 03 | - |
| உதவி முகாமையாளர் | 10 | 10 | - |
| கடற் சுற்றாடல் உத்தியோகத்தர் | 11 | 06 | 05 |
| கடற் சுற்றாடல் உதவியாளர் | 12 | 04 | 08 |
| கடல் மாசடைதல் தடுப்பு வெளிக்கள உதவியாளர் | 64 | 47 | 17 |
| சாரதி | 06 | 05 | 01 |
| உதவியாளர்கள் | 09 | 07 | 02 |
| | 170 | 86 | 34 |

2010 திசெம்பர் 31 இல் அதிகாரசபையின் அங்கீகரித்த பதவியணி மேலே உள்ளவாறு 120 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணி 86 ஆகும். 34 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதிகாரசபையினால்

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 நவம்பர் 24 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் டீஎம்எஸ்/ஈ2/58/5/375/2 கடிதத்தின் படி 2006 செப்தம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட 16 பதவிகளை 2008 ஜுலை 01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் விதத்தில் செயற்படுத்தப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரை அப் பதவிகளிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முகாமைத்துவ உதவியாளர் தரத்தினைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவரே அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வாரள் பதவியை வகிப்பதுடன் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடற் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை கடலோரங்கள் மற்றும் கடற் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஹம்பந்தோட்டை தொடக்கம் புத்தளம் வரையான மேற்குப்பிராந்திய கடற்கரையோரங்களில் நடைமுறைப்படுத்துவதுடன் அப்பிரதேசங்கள் 07 வலயங்களாக பிரிக்கப்பட்டு அவ் வலயங்களிற்கு உரித்தான பிரதேசங்களின் நடவடிக்கைகள் பிரதேச அலுவலகங்களினால் நிறைவேற்றப்படுகின்றன.

வலய அலுவலகங்களிற்காக மனித வளத்தினை ஈடுபடுத்துவது தொடர்பாக கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் வெளிப்பட்டன.

(i) காலி மற்றும் களுத்துறை ஆகிய அலுவலகங்களிற்காக மாத்திரம் இரண்டு முகாமைத்துவ உதவியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவ் உத்தியோகத்தர்களால் அச் சிறு அலுவலகங்களில் ஆற்றவேண்டிய பணிகளின் தன்மை குறித்து கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படவில்லை.

(ii) இதன் படி ஒவ்வொரு பிரதேச அலுவலகங்களிற்காகவும் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டிய முறை குறித்து திருத்தமாக தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டமொன்று இல்லாமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 2.2.5 கூட்டுத்திட்டம்

2008 – 2013 வரையான காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டுத்திட்டம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2003 யூன் 03 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிற்காக நாளதுவரையாக்கப்பட்ட கூட்டுத்திட்டமானது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) ஆட்சேர்ப்பு மற்றும் பதவியணிக் கிரயம்

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) பாதீடு

(உ) சொத்துக்கள்

(ஊ) முற்பணங்களை தீர்வுசெய்தல்